# அகத்தியர் அருளிய அரிய மருத்துவம்

# The Rare Medicine given by Agastya

*முனைவர் க. இரவி*
இணைப் பேராசிரியர் மற்றும்
தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஸ்ரீவில்லிபுத்தூர்

**Dr. K. Ravi**
*Associate Professor and Head of Department*
*Government Arts and Science College*
*Srivilliputtur*

## ஆய்வுச் சுருக்கம்

*மருத்துவம் என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும், அறிவியலும் ஆகும். இதனை நோய்களைக் கண்டுபிடிக்கவும், அவற்றை குணப்படுத்தவும், அவை வராமல் தடுக்கவும் உதவும் அறிவியல் அல்லது செயல்பாடு எனலாம். இதில் சித்த மருத்துவம் என்பது தென்னிந்திய தமிழ் மருத்துவ முறையாகும். பண்டைச் சித்தர்கள் இதனை உருவாக்கித்தந்துள்ளார்கள். சித்தர்கள்தங்கள் அருள் ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர். அதன் அடிப்படையில் சித்த மருத்துவத்தின் தந்தை அகத்தியர் ஆவார். 147 நூல்கள் எழுதிய அகத்தியர் அவர் பிறந்த நாளான மார்கழி மாதம் ஆயில்ய நட்சத்திர தினத்தில் 09.01.2023 "தேசிய சித்த மருத்துவ தினம்" கொண்டாடப்படுகிறது என்பதும் இங்ஙனம் அறியக்கூடியதாகும். அகத்தியர் அருளிய அரிய மருத்துவச் செய்திகளை ஆய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.*

***முக்கியச்சொற்கள்:*** *சித்தர்ள், அகத்தியர், சித்த மருத்துவம், மருத்துவ கோட்பாடு*

## Abstract

*Medicine is the art and science of curing diseases. It is a science or activity that helps to diagnose diseases, cure them and prevent them from occurring. Siddha medicine is a south Indian Tamil system of medicine. It was created by the ancient Siddhas. The Siddhas, by their knowledge of grace and wisdom, have understood it very well and have stated it very accurately. Based on this, Agasthya, the author of 147 books, is celebrating the "National Day of Siddha Medicine" on 09.01.2023 on the Ayilya Star day of Margazhi month, his birth anniversary. This study examines the rare medical messages of Agastya.*

***Keywords:*** *Siddhas, Agasthya, Siddha Medicine, Medical Theory.*

**Citation**

Ravi, K. "The Rare Medicine given by Agastya." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 77–82.

**முன்னுரை**

*மருத்துவம் என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும், அறிவியலும் ஆகும். இதனை நோய்களைக் கண்டுபிடிக்கவும், அவற்றை குணப்படுத்தவும், அவை வராமல் தடுக்கவும் உதவும் அறிவியல் அல்லது செயல்பாடு எனலாம். இதில் சித்த மருத்துவம் என்பது தென்னிந்திய தமிழ் மருத்துவ முறையாகும். பண்டைச் சித்தர்கள் இதனை உருவாக்கித் தந்துள்ளார்கள். சித்தர்கள் தங்கள் அருள் ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர். அதன் அடிப்படையில் சித்த மருத்துவத்தின் தந்தை அகத்தியர் ஆவார். 147 நூல்கள் எழுதிய அகத்தியர் அவர் பிறந்த நாளான மார்கழி மாதம் ஆயில்ய நட்சத்திர தினத்தில் 09.01.2023 "தேசிய சித்த மருத்துவ தினம்" கொண்டாடப்படுகிறது என்பதும் இங்ஙனம் அறியக்கூடியதாகும். அகத்தியர் அருளிய அரிய மருத்துவச் செய்திகளை ஆய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.*

**சித்த மருத்துவத்தின் சிறப்பு**

*நோய்வரி ன் நோய்நாடி அது தணிக்கும் வாய் நாடிச் செய்வது சித்த மருத்துவத்தின் சிறப்பாகும் இதனையே வள்ளுவரும்*

***"நோய்நாடி நோய்முதல் அது தணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்" (948 - குறள்)***

*மருத்துவன் நோயாளியின் சொல்லினாலும், நாடியினாலும் பிற உடற்குறியாலும், சிறுநீர் கழிபொருள்களின் இயல்பினாலும் நோய் இன்னதென்று ஆய்ந்து துணிந்து, பின்பு அது உண்டான காரணியத்தை ஆராய்ந்தறிந்து, அதன் பின் அந்நோயைப் படிப்படியாக நீக்கும் வழியை ஆய்ந்து கொண்டு அது வெற்றியாக நிறைவேறுமாறு கையாள்க என்பதை குறளின் வழி எடுத்தாண்டுள்ளார்.*

**சித்த மருத்துவத்தின் கோட்பாடுகள்**

*"உணவே மருந்து, மருந்தே உணவு" தாவரங்களும் உயிரி னங்களும் அதாவது பஞ்ச புதங்கள் எல்லாம் மனித நலன்களுக்காகப் பயன்படுமாற்றல் உள்ளவை என்பவை சித்த மருத்துவத்தின் கோட்பாடுகளாகும்.*

**சித்த மருத்துவத்தின் நோக்கமும், தன்மையும்**

*மரணமில்லாப் பெருவாழ்வை வலியுறுத்தும் சித்த மருத்துவம் செத்தாறை எழுப்புதல் பற்றியும் விளக்குகிறது. அதே போல் வாழ்க்கையில் கண்டறிந்த உண்மைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் சித்தர்கள் சாதி, சமயம் கடந்தவர்கள். உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தவர்கள். சித்தர்கள் வகுத்த நெறி வேதங்கள் ஆக மொத்தமாக மக்களுக்கான நல்வாழ்வு இலக்கியம்.*

**சித்த மருத்துவ முறைகள்**

*எளிய மக்களாலும் பின்பற்றத் தக்க வகையில் அமைந்த எளிய மருத்துவ முறையே சித்த மருத்துவ முறையாகும். சித்த மருத்துவம் நோய் உண்டாவதற்கான காரணங்களைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. அதாவது, மனித உடல் வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று*

*நிலைகளால் ஆனது என்றும் இவை சமநிலையில் இயங்கும் போது உடல் ஆரோக்கியமாக இருக்கும். சமநிலையை இழந்து இயங்கும் போது நோய்கள் ஏற்படுகின்றன. என்பதும் சித்தர்களின் கருத்தாகும்.*
*இதனையே,*

***"மிகினும் குறையினும் நோய் செய்யும் மேலோர்***
***வளிமுதலா எண்ணிய மூன்று" (குறள் - 941)***

*என்கிறார் வள்ளுவர். மருத்துவ நூலோர் குறிப்பிடும் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் அளவில் குறைந்தாலும், மிகுந்தாலும் நோய் உண்டாகும் என்பதே வள்ளுவரின் கருத்தாகும்.*

**ஆற்றல் தரும் மருந்து**

*காய கற்பம் என்பது பல்லாயிரம் ஆண்டுக்காலம் உடலினை வாழ வைக்கும் முறையாகும். காலம் என்ற சொல் உடல் என்பதைக் குறிக்கிறது. இதனை சித்தர்கள் காயகற்ப மூலிகை என்றழைத்தனர். இதன் மூலம் உடல் வலிமை பெற்று ஆற்றலை தருகிறது என்பதை,*

***"சிவனார் வேம்பு தனை***
***நவநாதர் பேரெழுதீ"***
***நீண்ட சர்க்கரை வேம்பு காய சித்தி (அ. நூ.தி-12)***

*சிவனார் வேம்பு, சர்க்கரை வேம்பினை உட்கொண்டு வந்தால் உடல் வன்மை பெற்று திகழும் என்பதை இப்பாடலின் வழி எடுத்துரைத்துள்ளனர்.*

**வித்தை கல்வியை அறியும் ஆற்றல்**

*உடல் வலிமை மட்டுமின்றி உடல் உள்ளுறுப்புகளிலும் சிறந்த மாற்றத்தினை காண முடியும் என்பதை சித்தர்கள் அறிவுறுத்துகின்றனர். இதனை,*

***"மாறாத நாற கரந்தை***
***புராய வித்தை தரும்"***
***வல்லாரை உண்டு மிகச்***
***சொல்லாத நற்கணைகள் (அ.நூ.தி -19)***

*கரந்தையானது கல்வியை அறியும் படியாக மூளைக்கு ஆற்றலைத் தரும் மருந்தாக விளங்குகிறது.*

*கீரை வகைகளில் ஒன்றான வல்லாரைக் கீரையை நாள்தோறும் ஒரு கைப்பிடி அளவு உட்கொண்டு வந்தால் நினைவாற்றல் திறன் அதிகாிக்கும் என்பதையும் இங்ஙனம் எடுத்துக் காட்டி சிறப்பித்துள்ளனர். இவ்வாறு மனித உடலினை வலிமை பெறும் மருந்தாக மட்டுமின்றி வித்தை கற்கும் மருந்தாகவும் அகத்தியர் பயன்படுத்தியதை இங்ஙனம் அறிய முடிகின்றது.*

**சித்தர் புகை இதுவே**

*உடலில் நோய் அதிகமாக இருக்கிறதா என்பதை பரிசோதிக்க சித்தர்கள் கூறும் பரிசோதனை முறை தான், இந்த புகை முறையாகும். கருமருது மரத்தினைக் கீறி, வடு ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்து வடியும் பிசின் சேகாிக்கப்படுகிறது. பின்னர் இது உறைந்து மருத்துவத்தில் பயன்படும் குங்கிலியமாகிறது. இதனைப் போன்றும் மூலிகை வேர்களைப் பயன்படுத்தியுள்ளதை*

***"எருக்கம் வேரை இழைத்தறைத்து***
***இயல்பாம் இலிங்க மதில் பிசிறி***
***பருக்கக் காய வைத்தெடுத்துப்***
***பதமாய்ச் சுங்கான் தனில்குடிக்க***
***வருத்த மான புண்புரையும்***
***வயிற்றில் கட்டி தலைக்குத்தும்***
***இறுக்கத் துடனே ஓடிவிடும்***
***இயல்பாய் சித்தர் புகையிதுவே்" (அ.நூ.தி -11)***

*எருக்கம் வேரை மையாக அரைத்து வைத்து அதனை இலிங்கத்தின் மீது போட்டு உலர்த்திக் கொள்ள வேண்டும். இதனை புகை பிடிப்பான் மூலம் புகைபிடித்தால் நெடுந்துன்பம் தரும் புண்கள், புரை நீங்கும். வயிற்றிலுள்ள மற்றும் நாள்பட்ட தலைவலி ஆகியன முற்றிலும் நீங்கும் என்பதை தான் சித்தர்கள் கூறிய புகையாக அமைந்துள்ளது.*

**மந்தம் தன்மை களைதல்**

*ஒரு செயல் இயல்பான வேகத்துடனும், சுறுசுறுப்புடனும் நடக்காத நிலையைத் தான் மந்தத் தன்மை என்பர். இதனை தான் சித்தர்கள் மனித உடலில் ஏற்படும் நிலையோடு குறிப்பிட்டுள்ளதை,*

***"மீறியதோர் மஞ்சளது மந்தம் போகும்***
***இஞ்சியை மௌ்ள வாட்டி***
***ஏலடேன் புரணியையும் நீக்கிக்***
***கொஞ்சாய் உப்பு***
***கற்கவு ஊற வைத்து***
***மிஞ்சிய மருந்த துக்கும்" (அ.நூ.தி. 33,42)***

*இஞ்சியைச் சிறிது தீயில் வாட்டி மேற்றோலை நீக்கவும். உப்பைச் சிறிது போடவும். இதனைப் பயன்படுத்திட மெல்லிய வயிற்றுவலி, வாயு, நெஞ்சைக்கரிக்கும் புளித்த ஏப்பம் என்பன தீரும் உணவு சீரனமாகும். மேலும்*

*மஞ்சள் வயிற்றிலுள்ள மந்தத்தைக் களையும் என்பதையும், கூறியுள்ளனர். பசியெடுக்காமலும் சாப்பிட்ட உணவு செரிக்காமலும் இருக்கும் அசௌகா்ய உணர்வினை போக்கும் முறையினை மூலிகையின் வழி எடுத்துரைத்துள்ளனர்.*

**மூலிகை ஊறுகாய்**

*தமிழரின் பாரம்பரிய உணவுகளில் ஒன்று. உப்பு முதலியவற்றில் ஊறின காய் அல்லது பழம் என்பர். "அச்சாறு" என்று கூறும் வழக்கமும் உண்டு. பதப்படுத்தப்பட்ட உணவுப் பண்டமாகும். வயிற்றில் ஏற்பட்ட புண்ணிற்கு நார்த்தாங்காய் ஊறுகாய் நல்ல மருந்தாக அமைகிறது என்பதை,*

***"கச்சல் நாரத்தங் காயைக்***
***கத்தியால் வளையமாக்கி***
***பிச்சமாய் உப்புத் தூளில்***
***மிளிர் மஞ்சள் வெந்தயத்தை"***

*இளங்காயாக உள்ள நாரத்தையை எடுத்து அதனை கத்தியால் வட்டமாக நறுக்கிக் கொண்டு பின் அதனுடன் மஞ்சள் மற்றும் வெந்தயம் சேர்த்து, இவற்றைப் பொடி செய்து ஒரு மண் பானையில் இட்டு வாயை துணியால் மூடி விடவும். இதனை அவ்வப்போது வெயிலில் உலர்த்தி வரவும். இப்படி 40 நாட்கள் செய்து பிறகு அதில் இருந்து தினமும் ஒரு துண்டை எடுத்்து காலையிலும், மாலையிலும் சாப்பிட்டு வயிற்றுப் புண்ணினைப் போக்கியுள்ளனர் என்பதை இப்பாடலடிகள் வழி அறிய முடிகின்றது.*

**குடற்புழு போக்கல்**

*கண்ணுக்கு தெரியாத கிருமிகள் வயிற்றுக்குள் செல்லும் போது புழுக்கள் உருவாகிறது. இதை வெளியேற்றாவிட்டால் வயிறு பிரச்சனையை சந்திக்க நேரிடும். இதனைப் போக்கும் விதமாக,*

***“ஆடுதின்னாப்பாளை புழு அகற்றுமே” (அ.பா.தி-21)***
***வாளப்பா வாய் விளங்கும், புழுக்கள் மாயும்” (அ.பா.தி - 35)***

*ஆடுதின்னாப்பாளை, வாய் விளங்கம் என்னும் மூலிகைச் செடிகள் குடலில் உள்ள புச்சிகளை வெளியேற்றும் தன்மை கொண்டதாகும் என்பதை இப்பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.*

**விடக்கடி மருந்து**

*விடக்கடி என்பது புச்சிகளால் ஏற்படும் துளைக் காயங்கள், புச்சிகள் கிளர்ந்தெழும் போது அல்லது உணவளிக்க முற்படும் போது தங்களைத் தற்காத்துக் கொள்ள கடிக்க முனைகின்றன. இதனைப் போக்கும் விதமாக,*

**கொல்லங் கோவை சூழ்கிழங்களை**
**நல்லாவின் பாலில் உண்ண**
***எல்லா விடமும் மீளும் (அ.பா.தி - 9)***

*கொல்லங் கோவைக் கிழங்கைப் பாலிலிட்டு அவித்து உண்டு வந்தால் விடக்கடிகள் நீங்கும். மேலும் அவுரி வேர், சீரகம், கார்போக அரி சி போன்ற பொருட்களை உபயோகித்து கடி நஞ்சுகளைப் போக்கியுள்ளதை இப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.*

**தொகுப்புரை**

*மூலிகைகளின் தன்மைகளைக் கூறிவந்த அகத்தியர் தன்னுடைய இரசவாத அறிவை பாடல்களில் வழி புலனாக்குகிறார். எவ்வகையான மூலிகைகளால் எந்தப் பொருளைக் கட்டலாம் என்பதும் இங்கேச் சுட்டப்படுகின்றது.*

*“பத்து மிளகு கையிலிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்” என்று முன்னோர்கள் கூறியதையும் இங்ஙனம் அறிய முடிகின்றது. உண்ணும் உணவின் மூலமாக பல்வேறு மருந்துகளை உட்கொண்டு, நோயற்று ஆரோக்கியமாக நீண்ட நாள் வாழ்வதை மட்டுமே அடிப்படை ஆரோக்கியம் என அறிந்து வைத்திருந்ததை இங்ஙனம் அறிந்து கொள்ளும் வகையில் இக்கட்டுரையானது அமைந்துள்ளது.*

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்**


1. ச. தண்டபாணி தேசிகர் - திருக்குறள் உரைக் களஞ்சியம் - மதரை காமராசர் பல்கலைக் கழகம் - முதற்பதிப்பு -1996 - மதுரை
2. அகத்தியர் நூல் திரட்டு - சரசுவதி மகால் நூலகம் - 2004 தஞ்சாவுர்
3. அகத்தியர் மருத்துவத் திரட்டு - சரசுவதி மகால் நூலகம் - 2004, தஞ்சாவுர்


## References


1. Dandapani Desikar, S., Thirukkural Text Repository, Madarai Kamarajar University, Madurai, First Edition, 1996.
2. Agathiyar Book Collection, Saraswathi Mahal Library, Thanjavur, 2004.
3. Agathiyar Medical Archives, Saraswati Mahal Library, Tanjore, 2004.